# 2 மனை வளங்கள்

ஆரோக்கியமான சூழலினூடாக கட்டியெழுப்பப்பட்ட மனையில் வாழும் அங்கத்தவர்களது தேவைகள் சரியான முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் சிறந்த திட்டமிடலும் ஒழுங்கமைப்பும் தேவை என்பது இப்போது உங்களுக்கு புலப்பட்டிருக்கும். அது மட்டுமல்லாது குடும்ப அங்கத்தவர்களது தனிப்பட்ட தேவைகள் போலவே சகல மனைச் செயற்பாடுகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமான வளங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுதல் அவசியமாகும். குடும்பத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதன் மூலம் குடும்ப அங்கத்தவர்களின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்கு மனை வளங்களைப் பயனுடையதாகக் கையாளுதல் முக்கியமானதாகும்.

## மனையின் வளங்கள்

குடும்பத்தின் தேவைகள் பல்வேறு விதமானதும் எல்லையற்றதுமாகும். அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. குடும்பத்தின் தேவைகள் பற்றி நீங்கள் கற்றுள்ள காரணிகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அவையாவன உடல், உள பௌதிக, சமூகத் தேவைகள் என்பது உங்களுக்குப் புலனாகும். இவ்வாறான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் போது குடும்ப அங்கத்தவர்களது நடிபங்கு மிக முக்கியமானதாகும். குடும்ப அங்கத்தவர்களால் ஆற்றப்பட வேண்டிய நடிபங்கு தொடர்பான சில செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் மனைக்கருமங்களை இனங்கண்டு கொள்ளுங்கள்.

அன்பையும் ஆதரவையும் பெற்றுக் கொடுத்தல்

உடைகளைக் கழுவுதல், உலர்த்தல், அழுத்துதல்.

பிள்ளைகளைப் பேணிப்பாது காத்தல் அவர்களது கற்றல் தேவைகளை நிறைவேற்றல்.



பாராட்டலும் ஏற்றுக் கொள்ளலும்.

உணவு சமைத்தல்.

பாதுகாப்பும் காப்புறுதியும் பெற்றுக் கொடுத்தல்

வீட்டைக் துப்பரவுசெய்தலும் அலங்கரித்தலும்

### மனைச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவற்றை இனம் காண்போம்

உணவு சமைத்தல்

- அங்கத்தவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்
- உணவுசமைப்பதில் விருப்பம்
- தேவையான பொருட்களை தெரிவு செய்தல்
- உணவு சமைக்க காலத்தை ஒதுக்குதல்
- பொருட்களை விலைகொடுத்து வாங்குவதற்கு பணத்தை இடுதல்
- உணவைச் சமைக்க நீர், எரிபொருள் மின் சாரம் என்பவற்றை விநியோகித்தல்
- உணவைச்சமைக்க இடத்தை ஒதுக்கிக் கொள்ளல்
- தேவையான உபகரணங்கள் கருவிகளைப் பயன்படுத்தல்

மேலே உள்ள செயற்பாடுகளைப் பயனுள்ளவாறு நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தப்படுபவை மனைவளங்கள் என இனம் காணலாம்.

### மனை வளங்கள்

- மனித வளங்கள்
- மனிதனல்லாத வளங்கள் என இரு வகைப்படும்.

### மனித வளங்கள்

மனிதனிடமுள்ள சக்தியை மானிட வளம் என இனங்காணமுடியும். அறிவு, மனப்பாங்கு, திறன் என்பவை மனித வளம் எனக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| அறிவு | கல்வியினூடாகவும், அனுபவத்தினூடாகவும் பெற்று விளங்கிக் கொண்டவிடயங்களை அறிவு என்று இனங்காண முடியும். |
| மனப்பாங்கு | ஒருவரது மனதில் ஏற்படும் சிறந்த உணர்வுகள் மனப்பாங்கு என்று இனங்காண முடியும். |
| திறன் | பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் ஒரு நபரிடம் ஏற்படும் இயலுமையை திறன் என இனங்காண முடியும். |
| சிரமம் /சக்தி விரயம் | பலவேறு செயற்பாடுகளில் ஒரு நபரிடமிருந்து பெறக் கூடிய உடல், உள சக்தியை சிரமம் / சக்தி விரயம் என இனங்காண முடியும். |

### மனிதனில் வளங்கள் (மனிதனல்லாத வளங்கள்)

மேலே காட்டப்பட்டுள்ள மனித சக்திக்கு மேலதிகமாக யாதேனும் ஒரு செயற் பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஏனையவை மனிதனல்லாத வளங்கள் எனக் கொள்ள முடியும். அவையாவன,

- பௌதிக வளங்கள்
- பௌதிகம் அல்லாத வளங்கள்

என்பனவாகும். பொருட்களாகக் காணப்படும் வளங்கள் பௌதிக வளங்கள் எனவும் பொருள்களாக இல்லாத வளங்கள் பௌதிகம் அல்லாத வளங்கள் எனவும் இனம் காணப்படும்.

| பௌதிக வளங்கள் | பௌதிகமல்லாத வளங்கள் |
|---|---|
| • பணம்<br>• எரிபொருள்<br>• நீர்<br>• இடவசதி<br>• சொத்துக்களும் பண்டங்களும்.<br>• பொதுவசதிகள் | • காலம்<br>• மின்சாரம் |

## பணம்

நவீன சமுதாயத்தில் பொருட்கள், சேவைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள பிரதானமாக பரிமாற்றப்படும் பொருள் பணமாகும். இவ்வாறே குடும்ப வரவு செலவுகளுக்கும் பணமானது பயன்படுத்தப்படுகின்றது. குடும்ப அங்கத்தவர்களது உழைப்பினால் கிடைக்கும் சம்பளம், வங்கிகளில் இருந்து கிடைக்கும். வட்டி, பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் கிடைக்கும் பங்குலாபம், பரிசுகள் மூலம் கிடைக்கும் பணம், குத்தகை, கூலி என்பவற்றால் பெறப்படும் பணம் என்பன பணமாகக் கிடைக்கும் வருமானங்களாகும்.

மேலே காட்டப்பட்டுள்ளவாறு நேரடியாகக் கிடைக்கும் பண வருமானத்திற்கு மேலதிகமாக பணப்பெறுமதி கொண்ட ஏனைய வருமானங்களும் உண்டு.

உதாரணம் : தைக்கப்பட்ட ஆடைகளை வாங்குவதை விட ஆடைகளை குடும்ப அங்கத்தவர்களே நிர்மாணித்துக் கொள்ளல்.

சிற்றுண்டி வகைகளை வீட்டு அங்கத்தவர்களே தயாரித்தல்.

## எரிபொருள்

வீட்டிற்கு ஒளியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஏனைய செயற்பாடுகளுக்கு வெப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் தேவையான பௌதிக வளம் எரிபொருளாகும். எரிபொருளானது திண்மமாகவும், வாயுவாகவும் எமக்குக் கிடைக்கின்றது. எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்படும் செயல்கள் மிகுந்த பயனைக் கொடுக்கும்.

## நீர்

மனிதனது தேவைகளையும், வீட்டுத்தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ள மிகத் தேவையான வளம் நீராகும். நீர் வட்டத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக எதிர்காலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்பதனால் நீரை மிகவும் சிக்கன மாகப் பயன்படுத்தல் வேண்டும்.

### இடவசதி

ஏதாவதொரு செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு வசதியை வழங்கும் இடம் (இடவசதி) ஒரு பௌதிக வளமாகும். இவ்வாறு ஒரு செயற்பாட்டிற்கு குறித்த இடவசதி கிடைத்தல் மூலம் செயற்பாட்டை வினைத்திறனுடையதாக்கலாம்.

### சொத்துக்களும் பண்டங்களும்

ஒரு நபரின் சொந்தக் காணி, தோட்டம், வீடு, பொருட்கள், உபகரணங்கள், ஆடை அணிகள், ஆபரணங்கள் ஆகிய அனைத்தும் பௌதிக வளங்களுக்கு உரியனவாகும்.

### பொது வசதிகள்

அரசாங்கம் மூலம் பல்வேறு சேவைகள் பொது வசதிகளாக வழங்கப்படுகின்றன. இலவசமாக அல்லது மிகக் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளும் அனைத்தும் பொதுவசதிகள் எனக் கொள்ளப்படும்.

உதாரணம்

- விளையாட்டு மைதானம்
- நூலகம்
- முப்படைகளினதும் பொலிசாரினதும் பாதுகாப்பு
- அரச கல்வி நிறுவனங்கள்
- சுகாதார பாதுகாப்பும் சேவையும், சௌக்கிய சேவையும்
- போக்குவரத்துச் சேவை

## பௌதிகம் அல்லாத வளம்

### காலம்

காலம் வரையறுக்கப்பட்ட வளமாகும். எனவே பல்வேறுப்பட்ட செயல்களுக்காக காலத்தை முறையாகத் திட்டமிட்டுக்கொள்ளுதல் மூலம் செய்யவேண்டிய செயல்களைக் தவறவிடாது செய்யலாம். அத்துடன் வாழ்வை ஓய்வுள்ளதாகவும் பிரயோசனம் உள்ளதாகவும் அசௌகரியம் அற்றதாகவும் மகிழ்ச்சியாகவும் கழிக்கலாம்.

### மின்சாரம்

மின்சக்தியானது ஒரு சக்தி முதலாகும். இதற்கு பணப் பெறுமதி உண்டு. வீட்டுத்தேவைகளில், ஒளியையும், வெப்பத்தையும் பொறிச் சக்தியையும் பெற்றுத் தரக்கூடிய வளமாக மின்சாரத்தை இனங்காணலாம்.

**மனையின் வளங்களை வகைப்படுத்துவோம்**




## செயற்பாடு 2.1

சென்ற ஆண்டில் நிமாலி தனது வீட்டில் புதுவருடத்தினைக் கொண்டாடிய முறை தொடர்பான விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நன்கு விளங்கி கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

நிமாலியின் குடும்பம் தாய், தந்தை, பாடசாலை செல்லும் இரு சகோதரிகள் ஒரு சகோதரன் ஆகியோரைக் கொண்டுள்ளது. பாட்டியும் அவர்களுடன் வாழ்கின்றார்.

குடும்பத்தில் அனைவரும் சித்திரைப் புத்தாண்டிற்காக ஆயத்தம் செய்த முறை பின்வருமாறு

- புதுவருடத்திற்கு முன்னர் குடும்பத்தார் அனைவருக்கும் புதிய உடை, புதிய உணவுப் பொருள்கள் என்பன வியாபார நிலையங்களிலிருந்து வாங்கப்பட்டிருந்தன. இதற்காக அதிகளவு பணம் செலவிடப்பட வேண்டியேற்பட்டது.
- வீட்டை தூய்மையாக்குவதற்காக வீட்டிலுள்ள பெரியோர்கள் மாத்திரம் ஈடுபட்ட அதே வேளை பிள்ளைகள் விளையாட்டில் ஈடுப்பட்டனர்.
- நிமாலியும் அம்மாவும் புதுவருடக் கொண்டாட்டத்திற்கு அவசியமான யாவற்றையும் ஆயத்தப்படுத்தினர். இதற்காக அதிக நேரம் செலவழிக்கப் பட்டதால் இருவரும் கடுமையாகக் களைப்புற்றனர்.

புதுவருட தினத்தன்று →

- புதுவருட சுபநேரத்திற்கேற்ப தமது வேலைகளை செய்துகொள்ள முடியாமல் போனதால் தாய் மனம் நொந்து போனாள்.
- கொண்டாட்டாட்டங்களின் பின்னர் வீட்டை மீண்டும் முறையாக ஒழுங்குபடுத்துவதால் நிமாலி பெற்றோருக்கு உதவினார்.
- அன்று வீட்டிற்கு வந்த உறவினர் நண்பர்களுக்கு உரிய முறையில் விருந்து வழங்கியதால் குடும்பத்தார் அனைவரும் திருப்தியடைந்தனர்.

1. மேல் விபரிக்கப்பட்டுள்ள குடும்பத்திற்குரிய வளங்களைப் பெயரிடுக.
2. விழா ஒழுங்கிற்காக வளங்களைப் பயன்படுத்துகையில் எதிர்நோக்கிய அசௌகரியங்களைக் குறிப்பிடுக.
3. அவற்றை நீக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளக் கூடிய மாற்று முறைகளை முன்வைக்குக.

## பொழிப்பு

மனிதத் தேவைகளிலும் வீட்டுச்செயற்பாடுகளிலும் பயன்படுத்தப்படும் மனைவளங்களை மனிதவளங்கள், மனிதனல்லாத வளங்கள் என வேறுபடுத்த முடியும். மனைச்செயற்பாடுகளை சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை இயன்றஅளவு பயன்படுத்துதல் முக்கியமாகும். குடும்பத்தின் எல்லாத்தேவைகளையும் சிறந்த முறையில் நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் வாழ்க்கையில் திருப்தியடையலாம்.

பல்வேறுபட்ட மனைச்செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்கையில் குடும்பத்திற்கு உரித்தான வளங்களை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். அவ்வளங்களை மனித வளங்கள், மனிதனல்லாத வளங்கள் என வகைப் படுத்தலாம். அவை வரையறுக்கப்பட்டவை என்பதால் அவற்றைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தும் விதமாகச் செயற்பட வேண்டும். அவ்வாறு செய்கையில் இதற்காக மாற்று முறைகளைக் கையாள வேண்டி ஏற்படலாம். வளங்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் வீட்டுத்தேவைகளை சிறந்த முறையில் நிறைவேற்றலாம். இதன் விளைவாகத் திருப்தியையும் மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலையும் கட்டியெழுப்ப முடியும்.

**கணிப்பீடு**

1. மனையின் வளங்களை வகைப்படுத்துக.
2. பல்வேறுப்பட்ட செயற்பாடுகளை சிறந்த முறையில் நிறைவேற்று கையில் மனித வளங்களின் பயன்பாட்டின் அவசியத்தை தெளிவு படுத்துக.
3. மனைச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது ஏற்படக்கூடிய பிரச்சனை களைத் தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய மாற்று முறைகளை உதாரணங்களுடன் தெளிவு படுத்துக.